வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 12.01.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜெர்மனி சேன்சலர் திரு. ஃபிரெட்ரிக் மெர்ஸ்-சுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, பல்வேறு துறைகளில், கூட்டு முன்முயற்சிகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இன்று விவேகானந்தர் பிறந்த நாள் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப் படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்றத் தலைவர்களுக்கு இடையிலான, 28ஆவது மாநாடு, புதுடெல்லியில், நாளை மறுநாள் தொடங்க உள்ளது.

புதுச்சேரியில், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு இலவச வேட்டி-சேலை வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

---------------------------

ஜெர்மனி 1 (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, காந்தி நகரில் உள்ள மகாத்மா மந்திரில், ஜெர்மனி சேன்சலர் திரு. ஃபிரெட்ரிக் மெர்ஸ்-சை, சந்தித்துப் பேசினார். இதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையே, பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில், விரிவான பல

முன்முயற்சிகள் அறிவிக்கப் பட்டுள்ளன. பாதுகாப்புத் துறைக்கு தேவையான ஆயுதங்கள், மற்றும், தளவாடங்களின் வடிவமைப்பு, மற்றும், உற்பத்தியில், ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான பிரகடனமும் இதில் அடங்கும். இந்தியாவும், ஜெர்மனியும், பொருளாதார கூட்டாளிகள் என்பதற்கு அப்பாற்பட்டு, உலக அமைதி, மற்றும், ஸ்திரத் தன்மைக்கு பாடுபடும் நாடுகளாகவும் திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறினார். இந்தியாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையிலான வர்த்தகம், 50 பில்லியன் டாலர் என்னும் சாதனை அளவைத் தாண்டி அதிகரித்து வருவதையும், தீவிரவாத்திற்கு எதிராக போராடுவதில், இருநாடுகளும் ஒத்த கருத்து கொண்டு இருப்பதையும், பிரதமர் சுட்டிக் காட்டினார்.

கூட்டு கடற்படைப் பயிற்சி போன்ற ராணுவ ஒத்துழைப்புத் திட்டங்களால், பாதுகாப்புத் திறன்கள் வலுப்பட ஏதுவாகும் என்று ஜெர்மனி சேன்சலர் திரு. மெர்ஸ் கூறினார். இந்தியா-ஜெர்மனி உடன்பாடுகள் குறித்து ஒரு தொகுப்பு.....

(வாய்ஸ்)

ஜெர்மனி 2 (12)

(வாய்ஸ்)

இந்தியா-ஜெர்மனி உயர்நிலை பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையில், தகைசால் மையம் ஒன்றை கூட்டாக அமைக்கவும், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில்,

ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், ஒப்புக் கொள்ளப்பட்டது. குஜராத் மாநிலம் லோத்தாலில், ஜெர்மனியுடன் இணைந்து, தேசிய அளவிலான கடல்சார் பாரம்பரிய வளாகம் ஒன்றை அமைக்கவும், உடன்பாடு எட்டப்பட்டது.

பொருளாதாரத் துறையை பொறுத்தவரை, இந்தியாவிற்கும், ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்வதில், திரு. மோடி, திரு. மெர்ஸ் ஆகிய இருதலைவர்களும் உறுதிப்பாடு வெளியிட்டனர். இளைஞர்களின் திறன் மேம்பாடு, மற்றும், வேலை வாய்ப்பிற்கான புலப்பெயர்வு குறித்து, பேச்சு வார்த்தைகளின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

ஜெர்மனி 3 (8)

முன்னதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஜெர்மனி சேன்சலர் திரு. மெர்ஸ் ஆகியோர், சபர்மதி ஆசிரமத்தில், மலரஞ்சலி செலுத்தினர். ஆசிரமத்தில் மகாத்மா காந்தி தங்கியிருந்த குடிலில், இரு தலைவர்களும், இராட்டையில் நூல் நூற்றனர். விடுதலையின் சக்தியில் மகாத்மா காந்தி வைத்திருந்த ஆழமான நம்பிக்கையினால், இன்று வரை அனைவரும் உணர்வூக்கம் பெற்று வருவதாக, பார்வையாளர் புத்தகத்தில், ஜெர்மனி சேன்சலர் குறிப்பிட்டார். தொடர்ந்து, சபர்மதி ஆற்றங்கரையில் தற்போது நடைபெறும், சர்வதேச பட்டம் விடும் விழாவிலும், இரு தலைவர்களும் கலந்து கொண்டனர்.

----------------------------

மோடி விவேகானந்தா (14)

இன்று, சுவாமி விவேகானந்தர் பிறந்தநாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளார். இந்தியாவின் இளைஞர் சக்திக்கு, ஆற்றல் மிகு உணர்வூக்கமாகத் திகழ்பவர், விவேகானந்தர் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். சுவாமி விவேகானந்தரின் வாழ்வும், வாக்கும், முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான, நாட்டு மக்களின் மன உறுதிக்கு, தொடர்ந்து புது ஆற்றல் பாய்ச்சி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். விவேகானந்தர் பிறந்த நாள் தேசிய இளைஞர் தினமாகவும், கொண்டாடப் படுவதை பிரதமர் சுட்டிக் காட்டி, தெய்வீகமான இந்நாளில், இளம் சகாக்கள் உட்பட, நாட்டு மக்கள் அனைவருக்கும் புதிய வலுவும், நம்பிக்கையும், பிறக்கட்டும் என வாழ்த்தி உள்ளார். மத்திய உள் துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தகவல்-ஒலிபரப்புத் அமைச்சர் திரு. அஷ்வின வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோரும், தேசிய இளைஞர் தின வாழ்த்து தெரிவித்து, செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

---------------------------

இஸ்ரோ (7)

இந்தியாவின் EOS-N1 புவி கண்காணிப்பு செயற்கைக் கோள் மற்றும் 15 இணை செயற்கைக் கோள்களுடன், இன்று ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்ட PSLV-C62 ராக்கெட், இறுதிக் கட்டத்திற்கு முந்தைய 3ஆம் கட்ட உந்துகை செயல்பாடுகளின்

போது, திட்டமிட்ட பயணப் பாதையில் இருந்து விலகியது. பயணப் பாதை குறித்த தரவுகளை விஞ்ஞானிகள் பகுப்பாய்வு செய்து வருவதாக, இஸ்ரோ தலைவர் டாக்டர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

---------------------------

ஏவுகணை (6)

தனி ஒரு நபர் தானே சுமந்து சென்று ஏவுவதன் மூலம், எதிரிகளின் கவச வாகனங்களை துல்லியமாக தாக்கி அழிக்கவல்ல, இந்தியாவின் அதிநவீன ஏவுகணை, நேற்று ஹைதராபாத்தில் வெற்றிகரமாக ஏவி, பரிசோதிக்கப்பட்டது. இந்த வெற்றியை சாத்தியமாக்கிய டிஆர்டிஓ விஞ்ஞானிகள்,மற்றும், தனியார் நிறுவனங்களுக்கு, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

---------------------------

கூட்டுறவு (13)

இந்தியாவில், மொத்தம் 32 கோடி உறுப்பினர்களுடன், நாடு முழுவதும் தொடக்க நிலை வேளாண் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுவதால், உலக அளவிலான பொருளாதார நெருக்கடிகளுக்கு ஏற்ப, வளைந்து கொடுக்கும் தன்மை நமக்கு இருப்பதாக, மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார். இந்தியப் பட்டயக் கணக்காயர் சங்கம் சார்பில், கூட்டுறவு குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, சிந்தனை மாநாட்டில் அவர் பேசுகையில், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, மற்றும், சமூக

ரீதியிலான அதிகார மேம்பாட்டிலும் கூட்டுறவுத் துறைக்கு முக்கிய பங்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டார். முன்னேறிய நாடாக இந்தியாவை வலுப்படுத்துவதில், கூட்டுறவுத் துறையின் பங்கேற்பை, வேளாண்மை, பால்வளம் போன்ற துறைகளுக்கு அப்பாற்பட்டு, முக்கியமான இதர துறைகளுக்கும் நீடிக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

----------------------------

*சபாநாயகர்கள் மாநாடு* (12)

காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்றத் தலைவர்களுக்கு இடையிலான, 28ஆவது மாநாடு, புதுடெல்லியில், நாளை மறுநாள் தொடங்க உள்ளது. இந்த 3 நாள் மாநாட்டை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 15ஆம் தேதி, முறைப்படி தொடக்கி வைப்பார் என்று, மக்களவைத் தலைவர் திரு. ஓம். பிர்லா, இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்றங்களுக்கு இடையில், சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வது குறித்தும், நாடாளுமன்ற செயல்பாடுகளில், செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்தும், மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்பட உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது, சமூக ஊடகத்தின் தாக்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் உடல் நலனும்-பாதுகாப்பும் என்பது உட்பட பல்வேறு தலைப்புகளிலும், அமர்வுகள் இடம்பெற உள்ளன.

----------------------------

*பிரகதி- எய்ம்ஸ் 1 (10)*

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் குறைகளை உடனுக்குடன் களைந்து, திட்டங்கள், குறித்த நேரத்தில் நிறைவேற்றி முடிக்கப்படுவதை உறுதிப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, பிரகதி தொழில் நுட்ப வசதி, இதுவரை, 50 கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி, புதிய மைல்கல் ஒன்றை எட்டி உள்ளது. பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பிரகதி வசதி மூலம் கண்காணித்து நிறைவேற்றப்பட்ட திட்டங்களில், நாக்பூர் எய்ம்ஸ் மருத்துவமனைத் திட்டம் குறித்து இன்று இந்த சிறப்புத் தொகுப்பில் காண்போம்.....

(வாய்ஸ்)

பிரகதி- எய்ம்ஸ் 2 (19)

(வாய்ஸ்)

மஹாராஷ்ட்ர மாநிலத்தின் கிழக்குப் பகுதியில், குறிப்பாக, விதர்பா, மற்றும், நாக்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த 46.53 லட்சம் கோடி மக்களுக்கு, முக்கிய 3ஆம் நிலை மருத்துவ வசதியாக, நாக்பூர் எய்ம்ஸ் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகள், ஆயிரத்து 577 கோடி ரூபாய் பட்ஜெட் ஒதுக்கீட்டுடன், 2015ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 7ஆம் தேதி தொடங்கின. கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, 2017 ஆகஸ்ட் 30ஆம்

தேதி, பிரகதி வசதி மூலம் மறு ஆய்வு செய்தார். கழிவுநீர்ப் பாதைகளை வேறு இடத்திற்கு மாற்றுவதில் ஏற்பட்ட சவால்களை, சம்பந்தப்பட்ட பல்வேறு ஏஜென்சிகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் வெற்றிகரமாக சமாளித்து, கட்டுமானப் பணிகள், 2021 டிசம்பர் 30ஆம் தேதி, முழுமையாக பூர்த்தி அடைந்தன. குறைவான மருத்துவ வசதிகளால், நீண்டகாலமாக பல சிரமங்களுக்கு ஆளாகி இருந்த ஒரு பிராந்தியத்தில், மேம்பட்ட சிகிச்சை வசதிகளை மக்களுக்கு வழங்கும், நாக்பூர் எய்ம்ஸ் மருத்துவமனை, விதர்பா பகுதியில் சுயசார்பை மேம்படுத்தும் பணிகளிலும் முக்கிய பங்காற்றி வருகிறது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும், மக்களுக்கான மருத்துவ வசதிகளை ஒரே சீராக மேம்படுத்துவதில், அரசுக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில், இம்மருத்துவமனை அமைந்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*நெசவாளர் (14)*

புதுச்சேரியில், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த 237 நெசவாளர்களுக்கு, பொங்கல் பண்டிகைக்கான இலவச வேட்டி-சேலை வழங்கும் பணிகளையும், 148 நெசவாளர்களுக்கு, மொத்தம் சுமார் 5 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய், உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கும் பணிகளையும், முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். புதுச்சேரியில் பாரம்பரிய நெசவுத் தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை குறைந்துவிட்ட நிலையில், விரும்பமுள்ளவர்களுக்கு பயிற்சி அளித்து,

இத்துறையை மீண்டும் வலுப்படுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். கூட்டுறவு சர்க்கரை ஆலை, மற்றும், கூட்டுறவு நூற்பாலைகளை தனியார் மூலம் மீண்டும் செயல்படுத்த, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். பாண்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு துறை அதிகாரிகள், நெசவாளர் கூட்டுறவு சங்க தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---------------------------

*புதுச்சேரி வேளாண்மை (7)*

புதுச்சேரியில், வேளாண் துறையும், பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் நிலையமும் இணைந்து, ஒதியம்பட்டில் ஏற்பாடு செய்திருந்த மணிலா சாகுபடி குறித்த பயிற்சி முகாமில், உழவர் உதவியகங்களைச் சேர்ந்த சுமார் 50 விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர். நிலக்கடலை பயிர் குறித்த சாகுபடி முறைகள் மற்றும், இயற்கை வேளாண் தொழில்நுட்பங்களை, வல்லுநர்கள் இம்முகாமில் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.

---------------------------

*வானிலை (12)*

இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலூர், மயிலாடுதுறை,

தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்கள், மற்றும், காரைக்கால் பகுதிகளில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், நாளை மறுநாள் வரை, மழை வானிலை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழக கடலோர பகுதிகளில், மணிக்கு 55 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், நாளை மறுநாள் வரை மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம் ஊத்து, நாலுமுக்கு ஆகிய இடங்களில், தலா 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

---------------------------

*மகளிர் கிரிக்கெட் (6)*

மகளிர் கிரிக்கெட்டில், பெங்களூர்-உத்தரபிரதேஷ் அணிகளுக்கு இடையிலான WPL 4போட்டி, நவி மும்பையில், இன்று மாலை நடைபெற உள்ளது. பெங்களூர் அணி, ஏற்கனவே மும்பை அணிக்கு எதிராக கிடைத்த வெற்றியைப் பராமரிக்கவும், உத்தரபிரதேஷ் அணி, குஜராத் அணியிடம் அடைந்த தோல்வியில் இருந்து மீளவும், இன்றைய போட்டியில் முனைப்புடன் ஆட உள்ளன.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜெர்மனி சேன்சலர் திரு. ஃபிரெட்ரிக் மெர்ஸ்-சுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, பல்வேறு துறைகளில், கூட்டு முன்முயற்சிகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

இன்று விவேகானந்தர் பிறந்த நாள் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப் படுவதை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

காமன்வெல்த் நாடுகளின் நாடாளுமன்றத் தலைவர்களுக்கு இடையிலான, 28ஆவது மாநாடு, புதுடெல்லியில், நாளை மறுநாள் தொடங்க உள்ளது.

புதுச்சேரியில், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு இலவச வேட்டி-சேலை வழங்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது